# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சூடாமணி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

நரகலோகப் பகுதிகளில் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை 28. அவற்றின் பெயர்களும் அங்கு செல்லும் குற்றவாளிகளும் தண்டனையின் கொடுமையும் கீழே பட்டியலிடப்படுகின்றன.

பிறருக்குச் சொந்தமானவற்றைக் கையகப்படுத்தலாகாது என்பதை மீறி பிறன் மனைவி, குழந்தை, பொருள் இவற்றை கொள்ளையடிப்போருக்கு ஏற்பட்ட நரகத்தின் பெயர் தாமிஸ்ரம். இங்கே ஓரளவு இருள் சூழ்ந்திருக்கும். வாதைகளும் உண்டு. முழுக்க முழுக்க கண்களில் இருள் கவிய பாவிகள் மயக்கமடைந்து விழும் நரகம் அந்த தாமிஸ்ரம். கணவனை வஞ்சித்து அல்லது மனைவியின் வாழ்வைப் பாழாக்கி, பூமியில் கொட்டமடிப்போருக்கு ஏற்பட்ட தனியிடம் இது. ரௌரவம் என்று ஒரு நரகம் உண்டு. இங்கே கடுந்துன்பங்கள் காத்திருக்கும். பிறருடைய குடும்பங்களை ஏமாற்றிக் கெடுத்து சொத்தைப் பறிக்கும் சுயநலக்காரர்களுக்கு ஏற்பட்ட இடம் இது.

இதே பெயருடன் இன்னொரு நரகம் உண்டு. அது மஹாரௌரவம் என்று அழைக்கப்படும். இங்கே ருரு என்ற ஒருவகை மான்கள் உள்ளன. இவை கூரிய கொம்புகளை உடையவை. இங்கே வரும் குற்றவாளிகளைத் தம் கொம்புகளால் குத்தி சின்னாபின்னப்படுத்திச் சிதைந்த உடலை மறுபடி சீராக்கி திரும்பவும் குத்தும். குடி கெடுக்கிறவர்களில் கொடியவர்கள் இங்கே தான் அனுப்பப்படுகிறார்கள். அடுத்த நரகத்தின் பெயர் கும்பீபாகம். சூடான பாத்திரங்களில் பாபிகள் வறுக்கப்படும் இடம். அனாவசியமாக உயிர்களை சித்ரவதை பண்ணுவோர் போய்ச் சேர்வது இங்கே!

பெரியோர்களையும் பெற்றோர்களையும் வணக்கத்திற்குரியவர்களையும் துன்புறுத்து கிறவர்களை பெருமாள் மறக்கவில்லை. அவர்களுக்கென்று ஒரு தனி நரகம் அமைத்திருக்கிறார். அதுதான் காலசூத்திரம்.

நாத்திகர்களுக்கு தனி மரியாதை வேண்டாமா? தெய்வத்தை நிந்திப்பவர்கள், தர்மசட்டங்களைத் தாமும் கைவிட்டு மற்றவர்களையும் கைவிடச் செய்தவர்கள் போகும் இடம் அசிபத்திரம். இங்கே கூரிய கத்திபோல் இருக்கும் இலைகள் உள்ள மரங்கள் உண்டு. தேகம் பலவாக பிளக்கப்படும். ஆட்சிபீடத்தில் அமர்ந்து விட்டோம் என்ற அகம்பாவத்தில் நீதி தவறி, பிறரைத் தண்டித்து அநீதிகள் புரிந்தவர்களுக்கு பன்றிமுகம் என்ற நரகம் காத்திருக்கிறது. இருள் சூழ்ந்த ஒரு பள்ளத்தில் தள்ளப்பட்டு துன்பப்படுவர், அந்தகூபம் என்ற பெயருள்ள ஒரு நரகில் – யார்? பிறரைச் சித்ரவதை செய்வதில் இன்பம் காண்போர், கொலை செய்வதைப் பற்றி பெருமைப்படுவோர், நம்பினவர்களுக்குத் துரோகம் செய்வோர் ஆகியோர்.

கிருமிகளை உணவாக உண்டு கிருமிகளால் ஒருவன் உண்ணப்பட்டால் அது

எப்படி இருக்கும்? அதுதான் கிருமிபோஜனம் என்ற நரகம். பிறருக்குக் கொடுக்காமல் தான் மட்டும் உண்டு அட்டைபூச்சி ரத்தத்தை உறிஞ்சுவது போல் பிறரை உறிஞ்சி வாழ்ந்து ஒழுக்கத்துக்கும் பக்திக்கும் ஆசாரத்துக்கும் நிரந்தர விடை கூறி விலங்கு போல் வாழ்வோருக்குத் தான் இந்த இடம் ஏற்பட்டது.

தனக்கு உடல்பலம், ஆள்பலம் ஆகியவை இருந்தால், அதனால் கொழுத்து, பிறரை பலாத்காரம் செய்து அடித்துப் பிடுங்கும் அயோக்கியக் கூட்டத்துக்கு ஏற்பட்ட நரகம் அக்னிகுண்டம். இங்கே நெருப்பு சுட்டெரிக்கும்! தகாத உறவுகள் என்று பெரியோர்கள் தடுத்தால் "தலையிடாதீர்கள்! இது என் இஷ்டம்" என்று அவர்களை அவமதித்து கூடத் தகாத ஆணுடனோ, பெண்ணுடனோ கூடி மகிழும் மோஹ வெறியர்களுக்கு இருக்கவே இருக்கிறது ஒரு நரகம். அது வஜ்ரகண்டகம் – அது குத்தும், கிழிக்கும்.

சான்மலி என்று ஒரு இடம். இது காம இன்பத்தில் மூழ்கி உயர்வு தாழ்வு பாராமல் தரங்கெட்ட செயல்களில் ஈடுபடுவோர்க்கு என்று ஏற்பட்டது. நல்ல மார்க்கத்தில் போய்க் கொண்டிருக்கிற மக்களுக்கு தவறான போதனைகளைச் சொல்லி தார்மீக வழியிலிருந்து மக்கள் விலகி அதர்மிஷ்டர்களாக மாறும்படி கபட வேஷம் தரித்து துர்ப்பிரசாரம் பண்ணக் கூடியவர்களுக்கு காத்திருக்கிற நரகம் வைதரணி. காமம் கட்டுக்கடங்காமல் போகும் போது தர்மத்தைக் கைவிட்ட துராசாரப் பெண்ணை நாடி, விலங்குகளைப் போல வாழும் கயவர்களுக்கு ஏற்பட்டது பூயோதம் என்ற நரகம். காரணமோ நோக்கமோ இல்லாமல் ஒரு பிராணி துன்புறுவதைக் கண்டு ரசிக்கும் நோக்கத்தோடு அதை சித்ரவதை செய்து கொலை புரிபவர்களுக்கு பிராணரோதம் என்ற நரகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நரகங்களிலே ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால் இங்கே கொடுக்கப் படும் துன்பங்கள் பூமியிலே சாத்யமில்லாதவை. மானிட வாழ்வில் நாம் அடையும் மிகப் பெரிய உடல் துன்பம் கூட இந்நரகங்களில் கொடுக்கப்படும் துன்பத்தில் கோடியில் ஒரு பங்கு கூட ஆகாது. அதற்கு காரணங்கள் இரண்டு ஒன்று, மனித சரீரம் ஒரளவுக்கு மேல் துன்புறுத்தப்பட்டால் துன்புறுத்தப்படும் பகுதி செத்துப் போகிறது. இரண்டாவது காரணம் அப்படி செத்துப் போனப்பகுதி மறுபடி உடனே உயிர்ப்பதில்லை. இந்த இரண்டு காரணங்களுமே நரகில் இல்லை. இன்பம் அனுபவிப்பதற்கென்றே தேவ சரீரம் ஏற்பட்டது போல, துன்பம் அனுபவிப்பதற்கென்றே நரகசரீரம் ஏற்பட்டது. இதை யாதனா சரீரம் என்பர். இது அதிகமான துன்பத்தைத் தருவது மட்டுமின்றி, ஒருமுறை சேதம் அடைந்தால் மறுபடி உடனே உயிர் பெற்று உருவாகி அதே துன்பத்தை அந்த ஆத்மா மீண்டும் அனுபவிக்கத் தகுதியுடையதாகிறது. உதாரணமாக, ஒருமுறை கையை வெட்டினால் மறுபடி அங்கே புதுக்கை முளைத்து இன்னொரு முறை வெட்டப்படுவதற்குத் தயாராகி விடுகிறது. கை வெட்டப்படும் துன்பம் எவ்வளவு காலத்திற்கு ஒரு ஆத்மாவால் அனுபவிக்கப்பட வேண்டும் என்று யமன் நிர்ணயிக்கிறானோ அவ்வளவு காலத்திற்கு இந்த வெட்டப்படுதலும் முளைத்தலும் நடந்து கொண்டே இருக்கும். இந்த நரகத் துன்பத்துக்கு அஞ்சித் தான் நாரணன் தாள் பற்றியதாக திருமங்கையாழ்வார் கூறுகிறார். மீண்டும் அடுத்த மாதம் நரக வேதனைகளை ஆராய்வோம். (தொடரும்)